196--

சேலம் நகராட்சியை மாநகராட்சியாக்க நடவடிக்கை

24255-திரு. க. அர்ச்சுனன் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சேலம் நகராட்சியை 'மாநகராட்சியாக்க' அரசு எடுத்த நடவடிக்கையின் தற்போதைய நிலை என்ன?

(ஆ) இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம் ஏன்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சேலம் நகராட்சியை மாநகராட்சியாக உயர்த்துவதற்கு முதல் கட்டப் பணியாக, சேலம் நகராட்சியைச் சுற்றியுள்ள சூரமங்கலம் நகராட்சியையும், சிவதாபுரம் முதலான 23 ஊராட்சிகளையும் 1.4.1994 முதல் சேலம் நகராட்சியின் எல்லைக்குள் சேர்த்துக் கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது. சேலம் மாநகராட்சிக்குரிய, மாநகராட்சி சட்டம் ஒப்புதல் பெறப்பட்டதும், சேலம் நகராட்சி மாநகராட்சி ஆக்கப்படும்.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் நகராட்சிக்கு வெளியிலே இருக்கிற கிராமப் பஞ்சாயத்துக்கள், கிட்டத்தட்ட 20-க்கும் மேற்பட்ட பஞ்சாயத்துக்களை இன்றையதினம் மாநகரட்சியின் பகுதிக்குள் சேர்த்து இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தப் பகுதிகள், நகராட்சிப் பகுதியைவிட அதிகமான வளர்ச்சியடைந்த பகுதிகளாக, அந்தப் பகுதிகளிலே நல்ல பங்களாக்கள் அமைந்து இருக்கின்றன. ஆனால், அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க முடியாத அளவிற்கு நிலைமை போய்க்கொண்டு இருக்கிறது. ஒழுங்கற்ற முறையிலே தற்போது பிளான் இல்லாமல் அடிக்கடி அங்கே பல்வேறு பகுதிகளிலே வீடுகளைக் கட்டிக்கொள்கின்ற காரணத்தினால், ஒரு ஒழுங்குமுறை வருவதற்காகவும், அந்தப் பகுதியிலே பாதுகாக்கப்பட்ட குடிநீர், நகராட்சிக்கு வருகின்ற பாதுகாக்கப்பட்ட குடிநீர், காவிரி ஆற்றுத் தண்ணீரை மற்ற பகுதிகளுக்கு விரிவுப்படுத்துவதற்காகவும், இந்த மாநகராட்சி என்கிற இந்தத் திட்டம், எப்போது, எவ்வளவு விரைவில் வரும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய மூன்று நகராட்சிகளையும் மாநகராட்சிகளாக மேம்பாடு செய்வதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு

கொள்கை அளவில் முடிவு எடுத்தது. இதற்காக விரிவான அறிக்கைகளும் பல்வேறு வகைகளிலே பெறப்பட்டன. அந்த அடிப்படையில் நகரப் பகுதிக்குரிய தகுதிகளைப் பெற்ற பகுதிகளைக் கண்டறிந்து அவற்றை மட்டும் புதிய மாநகராட்சிகளில் சேர்ப்பதற்கு அரசு முடிவு எடுத்திருந்தது. இதற்காக அரசு, அலுவலர் குழு ஒன்றினை சென்ற மே மாதத்தில் சேலத்துக்கு அனுப்பி ஆணை வெளியிட்டது. இந்த அலுவலர் குழு 26.5.1993 மற்றும் 27.5.1993 ஆகிய தேதிகளில் சேலம் மாநகராட்சியுடன் சேர்த்துக்கொள்ள பரிந்துரை செய்யப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டபின் அரசுக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து இருக்கிறது. இந்த அறிக்கையின் அடிப்படையிலே இன்றைக்கு பல்வேறு பகுதிகள் சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளாக இணைக்கவேண்டுமென்றும், சேர்க்கவேண்டுமென்றும் இன்றைக்கு அலுவலர் குழுவினர் தெரிவித்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் இந்த 23 பேரூராட்சிகளும், சிவதாபுரம், சூரமங்கலம் நகராட்சி போன்ற பகுதிகளும் உள்ளடக்கி உள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். புதிய மாநகராட்சியை அமைப்பதற்கு முதல் கட்டமாக அரசு அலுவலர் குழு அறிவித்து இருந்த அந்த அறிக்கையின் பேரிலே பொதுமக்களுக்கு ஆட்சேபனை இருந்தால், ஆட்சேபனைகளை 6 வார காலத்திற்குள் அரசுக்கு அனுப்புமாறு தமிழ்நாடு அரசிதழில் 1.12.1993 அன்று அறிக்கை வெளியிடப்பட்டு இருந்தது. இன்றைக்கு, சேலம், திருச்சி, திருநெல்வேலி நகராட்சிகளை, மாநகராட்சிகளாக உயர்த்துவதற்குத் தனியாக, மாநகராட்சிகள் சட்டங்கள் இயற்றப்பட வேண்டியிருக்கிறது. எனவே, இதற்காக, புதிய சேலம், திருச்சி, திருநெல்வேலி மாநகராட்சி சட்டங்கள் இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே, சட்டமன்றத்தின்முன் வைக்கப்படும். 74-ஆவது அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தத்தின்படியும் கொண்டுவரப்படும் மாநிலச் சட்டங்கள் திருத்தங்களுடன் சேர்த்து ஒப்புதல் பெறப்படும். அதன் பின்பு, சேலம், திருச்சி, திருநெல்வேலி நகராட்சிகளை மாநகராட்சிகளாக உயர்த்துவதற்கு அரசு அறிக்கை வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மத்திய அரசாங்கத்தினுடைய நகர்பாலிகாவும் பஞ்சாயத்துராஜ்-ம் வருகின்ற காரணத்தினாலே, சேலம் நகராட்சியை மாநகராட்சி ஆக்குகின்ற இந்தத் திட்டம், மிக விரைவாகச் செய்தால்தான், அந்த மாநகராட்சிகளிலே தேர்தல் நடத்துகின்ற ஒரு வாய்ப்பு இருக்கும். ஆகவே, அந்தத் தேர்தலை நடத்துவதற்கு ஒரு வாய்ப்பாக இந்த

ஆண்டுக்குள்ளேயே அந்தப் பணி முடிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியை மாநகராட்சியாக உயர்த்துவதற்குத் தனியாக மாநகராட்சியினுடைய சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். அந்த அடிப்படையிலேதான் இந்தப் புதிய மாநகராட்சிகள் சட்டம் மாநில சட்டத் திருத்தங்கள், 74-வது--அதாவது மாண்புமிகு உறுப்பினர் சொன்ன நகர்பாலிகா திருத்தச் சட்டத்திலேயே 74-வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி கொண்டு வரப்படும். மாநில சட்டங்கள் திருத்தங்களுடன் சேர்த்து ஒப்புதல் பெறப்படும். அதன்பின்பு சேலம் மாநகராட்சியாக அறிவிக்கை வெளியிடப்படும்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 197, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

197--

மனக்குடி அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆதிதிராவிட மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்

***13317-திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், தலைஞாயிறு ஒன்றியம், மனக்குடி அரசு மேல்நிலைப்பள்ளியில் 18 வயதிற்கு மேற்பட்ட ஆதிதிராவிட மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை அரசு உத்தரவிட்டும் வழங்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உதவித் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நாகை-காயிதே மில்லத் மாவட்டம், தலைஞாயிறு ஒன்றியம், மனக்குடி வையாபுரியார் அரசு மேல்நிலைப்பள்ளியில் 1992-93-ம் ஆண்டில் எல்லா மாணவர்களுக்கும் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுவிட்டது. 1991-92-ம் ஆண்டில், ஆதிதிராவிட மாணவர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்ட கல்வி உதவித் தொகையான ரூ. 5,270-ம் 18.3.1993-ல் வழங்கப்பட்டு விட்டது.